DINAMANI 13 FEB 2010

# ஆதி சிவனை உணரும் முயற்சியில் ஈடுபட வேண்டும்





கோவை ஈஷா யோக மையத்தில் வெள்ளிக்கிழமை நடந்த மஹாசிவராத்திரி விழாவில் பேசுகிறார் ஜகி வாசுதேவ். (வலது) விழாவில் பங்கேற்ற பக்தர்கள்.

**ஜகி வாசுதேவ்**

கோவை, பிப்.12: மஹா சிவராத்திரியன்று ஆதி சிவனின் சக்தியை உணரும் முயற்சியில் அனைவரும் ஈடுபட வேண்டும் என ஈஷா யோக மைய நிறுவனர் ஜகி வாசுதேவ் கூறினார்.

கோவையை அடுத்த வெள்ளியங்கிரி மலைச்சாரலில் அமைந்துள்ள ஈஷா யோக மையத்தில் மஹா சிவராத்திரி விழா கோலாகலமாக வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. இந்தக் கொண்டாட்டங்கள் குரு பூஜையுடன் துவங்கியது. விழாவின் ஒரு பகுதியாக, லட்சக்கணக்கான மக்களுக்கு சத்குரு ஜகி வாசுதேவ் தீவிர தியானப் பயிற்சி அளித்தார்.

இதைத் தொடர்ந்து, மகாமந்திர உட்சாடண நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் அவர் பேசியது:

மஹா சிவராத்திரியன்று உலகெங்கும் சக்தி நிறைந்து இருக்கும். அந்தச் சக்தியை பெறும் முயற்சியில் ஆன்மிகவாதிகள் ஈடுபடுவர். ஆனால், ஆன்மிகத்தில் முன் அனுபவம் இல்லாதவர்கள் கூட சிவராத்திரியன்று கண்விழிப்பதன் மூலம் இணையற்ற ஆற்றலை தங்களுக்குள் பெற முடியும்.

அனைத்து இரவுகளையும் நாம் தூங்கித்தான் கழித்துக் கொண்டிருக்கிறோம். சிவராத்திரியன்று மட்டுமாவது விழிப்பு நிலையில் இருந்து அனைத்துக்கும் ஆதியான சிவனின் சக்தியை உணரும் முயற்சியில் ஈடுபட வேண்டும். தியான நிலையில் கடவுளை உணரும்போது உடலுக்குள் புத்துணர்ச்சி பிறப்பதை நம்மால் நன்கு உணர முடியும். அந்தப் புத்துணர்ச்சி மனதுக்கு பன்மடங்கு வலிமையைக் கொடுக்கும். அதே சமயம், ஆழ்மனதையும் விழிப்படையச் செய்யும்.

சிவன் என்ற சொல்லுக்கு 'எது இல்லையோ அது' என்று பொருள். சிவனே முதல் யோகி. ஆகாயத்தில் காணப்படும் வெற்றிடம்தான் சிவன். அந்த வெற்றிடத்தைப் போல் சிவனுக்கும் ஆதியும், மூலமும் இல்லை. மனிதர்களின் உள்ளத்தில் எழும் இன்பம், துயரம் என அனைத்து உணர்ச்சிகளின் பிரதிபலிப்பாக சிவன் திகழ்கிறார் என்றார்.

பிரபல புல்லாங்குழல் மேதை பண்டிட் ஹரி பிரசாத் சௌராசியாவின் பன்சூரி புல்லாங்குழல் இசையும், மிடிவல் பண்டிட்ஸின் எலக்ட்ரானிக் இசையும் மக்களின் செவிக்கு விருந்து படைத்தது. கலைஞர் சிவமணி தாள இசையும், சவுண்ட்ஸ் ஆப் ஈஷா குழுவினரின் இசையும் அனைவரையும் பரவசத்தில் ஆழ்த்தியது.